**சுருக்கம்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21/1994) – விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி மற்றும் காணை ஊராட்சி ஒன்றியங்களை மறுசீரமைப்பு செய்து கஞ்சனூர் எனும் புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது – இறுதி ஆணை மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21/1994) பிரிவு 15, உட்பிரிவு (3) மற்றும் (4)–ன்படி அறிவிக்கை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி [பரா–2(1)]த் துறை**

**அரசாணை (நிலை)எண். 58** — **நாள்: 27.02.2026.**
**விசுவாவசு, மாசி 15,**
**திருவள்ளுவர்ஆண்டு 2057.**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.345,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் [(ப.ரா–2(1)] துறை, நாள் 08.12.2025.
2. தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 817, நாள் 08.12.2025.
3. விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.வ.அ5/4835/2024, நாள்.12.02.2026.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.69023/2023/PRI–SFC.1, நாள்.16.02.2026.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.69023/2023/PRI–1–1, நாள்.24.02.2026.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மற்றும் மறுசீரமைப்பு செய்து உத்தரவிடப்பட்டது.

அதில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் 51 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கியது மற்றும் காணை ஊராட்சி ஒன்றியம் 50 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கியது. விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 18 கிராம ஊராட்சிகளையும் மற்றும் காணை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 19 கிராம ஊராட்சிகளையும் பிரித்து 37 கிராம ஊராட்சிகளுடன் கஞ்சனூர் எனும் புதிய ஊராட்சி ஒன்றியமாகவும் அமைத்துருவாக்குவதற்கு மேற்படி வட்டாரப் பகுதிகளை விளம்புகை செய்வதற்கான நோக்கத்தை அறிவிக்கையாக அரசு ஆணையிட்டுள்ளது.

2. இதனை தொடர்ந்து, இரண்டாவதாக படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 817, நாள் 08.12.2025–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குள் இந்த அறிவிக்கை குறித்த மறுப்பினை தெரிவிக்க விரும்பினால் எழுத்து மூலம் அரசுக்கு தெரிவிக்க வேண்டுமென்றும், அவ்வாறு அந்த உள்ளூர் வட்டார பகுதியில் குடியிருந்து வருகின்ற யாரிடமிருந்தும் மேலே கூறப்படும் காலக்கெடுவுக்குள் மறுப்பு ஏதும் பெறப்பட்டால் அதனை அரசு உரிய பரிசீலனை செய்யும்பொருட்டு எழுத்து மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவில் கீழ்க்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது:

திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மற்றும் மறுசீரமைப்பு செய்து முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் உத்தரவிடப்பட்டது. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 15, உட்பிரிவு (1)–ன் கீழ் தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 18 கிராம ஊராட்சிகளையும் மற்றும் காணை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 19 கிராம ஊராட்சிகளையும் பிரித்து 37 கிராம ஊராட்சிகளுடன் கஞ்சனூர் எனும் புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கி மறுசீரமைப்பு செய்து உருவாக்குவதற்கும் பொதுமக்களிடமிருந்து 08.12.2025 முதல் 19.01.2026 வரை வரப்பெற்ற ஆட்சேபனைகள் கீழ்க்காணுமாறு பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பிரித்து புதியதாக உருவாக்கப்பட்ட கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியத்துடன் சேர்க்கப்பட்ட எசாலம் கிராம ஊராட்சியை மீண்டும் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கும் மற்றும் காணை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பிரித்து கஞ்சனூர் ஊராட்சி

ஒன்றியத்துடன் சேர்க்கப்பட்ட போரூர் கிராம ஊராட்சியை மீண்டும் காணை ஊராட்சி ஒன்றியத்திற்கும் கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளவாறு மாற்றம் செய்ய விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் விக்கிரவாண்டி மற்றும் காணை ஊராட்சி ஒன்றியங்களை மறுசீரமைப்பு செய்து கஞ்சனூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கியதில் சில கிராம ஊராட்சிகளை மாற்றக்கோரி வரப்பெற்ற ஆட்சேபனைகளின் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டதில் காணை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஏழுசெம்பொன், சித்தேரி, வெங்கமூர், செம்மேடு மற்றும் சிறுவாலை ஆகிய 5 கிராம ஊராட்சிகளை நீக்கி புதியதாக உருவாக்கப்பட்ட கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்தும், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தென்பேர், நாரசிங்கனூர் மற்றும் டி.புதுப்பாளையம் ஆகிய 3 கிராம ஊராட்சிகளை நீக்கி புதியதாக உருவாக்கப்படும் கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியத்துடன் பின்வருமாறு இணைத்து திருத்தம் செய்ய விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | கிராம ஊராட்சியின் பெயர் | அரசாணை (நிலை) எண் 345, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா–2(1) துறை, நாள் 08.12.2025–ன்படி இடம் பெற்றுள்ள ஊராட்சி ஒன்றியம் | மாற்றம் செய்யக் கோரப் பட்டுள்ள ஊராட்சி ஒன்றியம் |
|---|---|---|---|
| 1. | ஏழுசெம்பொன் | காணை | கஞ்சனூர் |
| 2. | சித்தேரி | காணை | கஞ்சனூர் |
| 3. | நாரசிங்கனூர் | விக்கிரவாண்டி | கஞ்சனூர் |
| 4. | செம்மேடு | காணை | கஞ்சனூர் |
| 5. | சிறுவாலை | காணை | கஞ்சனூர் |
| 6. | தென்பேர் | விக்கிரவாண்டி | கஞ்சனூர் |
| 7. | டி.புதுப் பாளையம் | விக்கிரவாண்டி | கஞ்சனூர் |
| 8. | வெங்கமூர் | காணை | கஞ்சனூர் |
| 9. | எசாலம் | கஞ்சனூர் | விக்கிரவாண்டி |
| 10. | போரூர் | கஞ்சனூர் | காணை |

4. மேற்கண்ட கிராம ஊராட்சிகள் மாற்றங்கள் அடிப்படையில் தற்போது விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 20 கிராம ஊராட்சிகளையும் மற்றும் காணை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 23 கிராம ஊராட்சிகளையும் பிரித்து 43 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி புதியதாக கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியம் உருவாக்கவும், எஞ்சியுள்ள 31 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியமாகவும், 27 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி காணை ஊராட்சி ஒன்றியமாகவும் செயல்பட மறுசீரமைப்பு செய்ய விழுப்புரம் மாவட்ட ஆட்சித்

தலைவர் பரிந்துரை செய்துள்ளார் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் சுருக்கம் கீழ்க்காணுமாறு:

| ஊராட்சி ஒன்றியங்கள் பிரிப்பதற்கு முன்பு | | | அரசாணை (நிலை) எண் 345, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா–2(1) துறை, நாள் 08.12.2025. | | தற்போது கிராம ஊராட்சிகளை மாற்றம் செய்யக் கோருவது | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
| 1 | விக்கிரவாண்டி | 51 | விக்கிரவாண்டி | 33 | விக்கிரவாண்டி. | 31 |
| 2 | காணை | 50 | காணை | 31 | காணை | 27 |
| மொத்தம் | | 101 | கஞ்சனூர் | 37 | கஞ்சனூர் | 43 |
| | | | மொத்தம் | 101 | மொத்தம் | 101 |

5. மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

6. எனவே, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 18 கிராம ஊராட்சிகளையும் மற்றும் காணை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 19 கிராம ஊராட்சிகளையும் பிரித்து புதியதாக 37 கிராம ஊராட்சிகளுடன் கஞ்சனூர் எனும் புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்க மறுசீரமைப்பு செய்ய மேலே 1 மற்றும் 2–இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அறிவிக்கை தொடர்பாக அப்பகுதி மக்களிடமிருந்து ஆட்சேபனைகள் பெறப்பட்ட நிலையில் மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையை பகுதியளவு திருத்தம் செய்து விழுப்புரம் மாவட்டத்தில் மேற்படி அட்டவணைகளில் உள்ள திருத்தங்களின் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டம், கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியத்துடன் சேர்க்கப்பட்ட "எசாலம்" கிராம ஊராட்சியை மீண்டும் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்தும், "போரூர்" கிராம ஊராட்சியை மீண்டும் காணை ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்து மறுசீரமைப்பு செய்தும் மேலும், அம்மாவட்டதில் காணை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏழுசெம்பொன், சித்தேரி, வெங்கமூர், செம்மேடு மற்றும் சிறுவாலை ஆகிய 5 கிராம ஊராட்சிகளையும் மற்றும் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தென்பேர், நாரசிங்கனூர் மற்றும் டி.புதுப்பாளையம் ஆகிய 3 கிராம ஊராட்சிகளையும்

ஆகமொத்தம் 8 கிராம ஊராட்சிகளையும் புதியதாக உருவாக்கப்படவுள்ள கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்து மறுசீரமைப்பு செய்தும் மேலும், மேற்காண் கிராம ஊராட்சிகள் மாற்றத்தின் அடிப்படையில் தற்போது விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 20 கிராம ஊராட்சிகளையும் மற்றும் காணை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 23 கிராம ஊராட்சிகளையும் பிரித்து 43 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி புதியதாக கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியம் உருவாக்கியும், எஞ்சியுள்ள 31 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியமாகவும், 27 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி காணை ஊராட்சி ஒன்றியமாகவும் செயல்பட மறுசீரமைப்பு செய்து இறுதி ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி இறுதி ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

7. மேற்காண் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, மேலே 1 மற்றும் 2–இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அறிவிக்கையில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து மற்றும் மறுசீரமைப்பு செய்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டத்தில் அப்பகுதி மக்களிடமிருந்து ஆட்சேபனைகள் பெறப்பட்ட நிலையில் அவ்வாணையினைத் பகுதியளவு திருத்தம் செய்து கீழ்க்காணுமாறு மறுசீரமைப்பு செய்து இறுதி ஆணை மற்றும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு–15, உட்பிரிவு (3) மற்றும் (4)–ன்படி அறிவிக்கை வெளியிடவும் உறுதி செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

அ) விழுப்புரம் மாவட்டதில் புதியதாக உருவாக்கப்படும் கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியத்துடன் சேர்க்கப்பட்ட "எசாலம்" கிராம ஊராட்சியை மீண்டும் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்துடனும், "போரூர்" கிராம ஊராட்சியை கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மீண்டும் காணை ஊராட்சி ஒன்றியத்துடனும் இணைத்து மறுசீரமைப்பு செய்யப்படுகிறது.

(ஆ) விழுப்புரம் மாவட்டதில், காணை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏழுசெம்பொன், சித்தேரி, வெங்கமூர், செம்மேடு மற்றும் சிறுவாலை ஆகிய 5 கிராம ஊராட்சிகளையும் மற்றும் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தென்பேர், நாரசிங்கனூர் மற்றும் டி.புதுப்பாளையம் ஆகிய 3 கிராம ஊராட்சிகளையும் ஆகமொத்தம் 8 கிராம ஊராட்சிகளையும் புதியதாக உருவாக்கப்படும் கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்து மறுசீரமைப்பு செய்யப்படுகிறது,

(இ) மேற்கண்ட கிராம ஊராட்சிகள் மாற்றத்தின் அடிப்படையில் தற்போது விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 20 கிராம ஊராட்சிகளையும் (பின்னிணைப்பு I–ல் உள்ளவாறு) மற்றும் காணை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 23 கிராம ஊராட்சிகளையும் (பின்னிணைப்பு II–ல் உள்ளவாறு) நீக்கம் செய்து 43 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி (பின்னிணைப்பு III–ல் உள்ளவாறு) கஞ்சனூர் எனும் புதிய ஊராட்சி ஒன்றியமாக உருவாக்கப்படுகிறது மற்றும்,

(ஈ) விழுப்புரம் மாவட்டதில், 31 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியமாகவும், 27 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி காணை ஊராட்சி ஒன்றியமாகவும் செயல்படவும் மறுசீரமைப்பு செய்யப்படுகிறது.

7. மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும். அதனடிப்படையில், இந்த அரசாணையின்படி, பிரிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் எல்லை வரையறை 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும்.

8. இவ்வாணையினைத் தொடர்ந்து, 27.02.2026 நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் பின்னிணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகளை (I, II & III) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுமாறு பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75
(27.02.2026 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிட)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் மாவட்டம்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக).
<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
தனிச்செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## APPENDIX
## NOTIFICATION – I

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the Notification published in respect of declaration of Vikkiravandi Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local areas specified below, from the Vikkiravandi Panchayat Development Block so as to constitute them as a separate panchayat development block. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**Name of the Village Panchayat.**

(1) Brammadesam.
(2) Eachangkuppam.
(3) Ennayiram.
(4) Kaspakaranai.
(5) Kundalapuliyur.
(6) Mandagapattu.
(7) Muttathur.
(8) Nagar.
(9) Nandhivadi.
(10) Nemur.
(11) Pidaripattu.
(12) Se.Kunnathur.
(13) Se.Pudur.
(14) Thirunanthipuram.
(15) Thumbur.
(16) Veliyandhal.
(17) Vembi.
(18) **Narasinganur.**
(19) **T. Pudupalaiyam.**
(20) **Thenpair.**

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer.

## அறிவிக்கை – I

1994–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (1)–ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், மேற்காணும் சட்டத்தின் 15–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின்படி விக்கிரவாண்டி ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்தும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் விக்கிரவாண்டி ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை தனி ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக ஏற்படுத்துவதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் பகுதிகளை விக்கிரவாண்டி ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து இதனால் நீக்குகிறார். மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

**கிராம ஊராட்சியின் பெயர்.**

(1) பிரம்மதேசம்.
(2) ஈச்சங்குப்பம்.
(3) எண்ணாயிரம்.
(4) கஸ்பாகாரணை.
(5) குண்டலப்புலியூர்.
(6) மண்டகப்பட்டு.
(7) முட்டத்தூர்.
(8) நகர்.
(9) நந்திவாடி.
(10) நேமூர்.
(11) பிடாரிப்பட்டு.
(12) செ.புதூர்.
(13) செ.குன்னத்தூர்.
(14) திருநந்திபுரம்.
(15) தும்பூர்.
(16) வேலியந்தல்.
(17) வேம்பி.
(18) நாரசிங்கனூர்.
(19) புதுப்பாளையம்.டி.
(20) தென்பேர்.

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

**NOTIFICATION-II**

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the Notification published in respect of declaration of Kanai Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local areas specified below, from the Kanai Panchayat Development Block so as to constitute them as a separate panchayat development block. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**Name of the Village Panchayat.**

(1) Anniyur.
(2) Anumanthapuram.
(3) Athiyur thirukkai.
(4) C.N.Palayam.
(5) Kadayam.
(6) Kalyanampoondi.
(7) Kanjanur.
(8) Karuvatchi.
(9) Melkaranai.
(10) Nallapalayam.
(11) Nangathur.
(12) Panamalai.
(13) Perungalampoondi.
(14) Salavanur.
(15) Sangeethamangalam.
(16) Thirukkunam.
(17) Udayanatham.
(18) Vellayampattu.
(19) Elusempon.
(20) Semmedu.
(21) Siruvalai.
(22) Sitheri.
(23) Vengamoor.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer.

<u>அறிவிக்கை – II</u>

1994–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15–ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (1)–ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், மேற்காணும் சட்டத்தின் 15–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின்படி காணை ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்தும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் காணை ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தை தனி ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக ஏற்படுத்துவதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் பகுதிகளை காணை ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து இதனால் நீக்குகிறார். மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

**கிராம ஊராட்சியின் பெயர்.**

(1) அன்னியூர்.
(2) அனுமந்தபுரம்.
(3) அத்தியூர் திருக்கை.
(4) கடையம்.
(5) கல்யாணம்பூண்டி.
(6) கஞ்சனூர்.
(7) கருவாட்சி.
(8) மேல்காரணை.
(9) நல்லாப்பாளையம்.
(10) நங்காத்தூர்.
(11) சி.என்.பாளையம்.
(12) பனமலை.
(13) பெருங்கலம்பூண்டி.
(14) சாலவனூர்.
(15) சங்கீதமங்கலம்.
(16) திருக்குணம்.
(17) உடையாநத்தம்.
(18) வெள்ளையாம்பட்டு.
(19) ஏழுசெம்பொன்.
(20) செம்மேடு.
(21) சிறுவாலை.
(22) சித்தேரி.
(23) வெங்கமூர்.

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

(signature)
பிரிவு அலுவலர்.

## NOTIFICATION-III

In exercise of the powers conferred by sub-section (3) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby declares the local areas specified below, to be a panchayat development block, namely Kanjanur Panchayat Development Block and also declares the said panchayat development block to be a panchayat union, namely, Kanjanur Panchayat Union, the intention to declare the same having been published as required under sub-section (1) of section 15 of the said Act. Based on the above constitution of Kanjanur Panchayat Union, wards will be divided for the next ordinary election.

**Name of the Village Panchayat.**

(1) Anniyur.
(2) Anumanthapuram.
(3) Athiyur thirukkai.
(4) C.N.Palayam.
(5) Kadayam.
(6) Kalyanampoondi.
(7) Kanjanur.
(8) Karuvatchi.
(9) Melkaranai.
(10) Nallapalayam.
(11) Nangathur.
(12) Panamalai.
(13) Perungalampoondi.
(14) Salavanur.
(15) Sangeethamangalam.
(16) Thirukkunam.
(17) Udayanatham.
(18) Vellayampattu.
(19) Elusempon.
(20) Semmedu.
(21) Siruvalai.
(22) Sitheri.
(23) Vengamoor.
(24) Brammadesam.
(25) Eachangkuppam.
(26) Ennayiram.
(27) Kaspakaranai.
(28) Kundalapuliyur.
(29) Mandagapattu.
(30) Muttathur.
(31) Nagar.
(32) Nandhivadi.
(33) Nemur.
(34) Pidaripattu.
(35) Se.Kunnathur.
(36) Se.Pudur.
(37) Thirunanthipuram.

**Name of the Village Panchayat.**

(38) Thumbur.
(39) Veliyandhal.
(40) Vembi.
(41) Narasinganur.
(42) T. Pudupalaiyam.
(43) Thenpair.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer.

## அறிவிக்கை – III

1994–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15–ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (3)–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–இன் 15–ஆம் பிரிவின் உட்பிரிவு (1)–இன் கீழ் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திற்காக ஒரு ஊராட்சி ஒன்றியம் அதாவது கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியத்தை அமைத்துருவாக்குவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் பகுதிகளை விளம்புகை செய்வதற்கு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுடைய நோக்கத்தை ஈங்கிதனால் அறிவிக்கிறார். மேற்சொன்ன கஞ்சனூர் ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் உருவாக்கத்தின் அடிப்படையில் வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

**கிராம ஊராட்சியின் பெயர்.**

(1) அன்னியூர்.
(2) அனுமந்தபுரம்.
(3) அத்தியூர் திருக்கை.
(4) கடையம்.
(5) கல்யாணம்பூண்டி.
(6) கஞ்சனூர்.
(7) கருவாட்சி.
(8) மேல்காரணை.
(9) நல்லாப்பாளையம்.
(10) நங்காத்தூர்.
(11) சி.என்.பாளையம்.
(12) பனமலை.
(13) பெருங்கலம்பூண்டி.
(14) சாலவனூர்.
(15) சங்கீதமங்கலம்.
(16) திருக்குணம்.
(17) உடையாநத்தம்.
(18) வெள்ளையாம்பட்டு.
(19) ஏழுசெம்பொன்.
(20) செம்மேடு.
(21) சிறுவாலை.
(22) சித்தேரி.
(23) வெங்கமூர்.
(24) பிரம்மதேசம்.
(25) ஈச்சங்குப்பம்.
(26) எண்ணாயிரம்.
(27) கஸ்பாகாரணை.
(28) குண்டலப்புலியூர்.
(29) மண்டகப்பட்டு.

**கிராம ஊராட்சியின் பெயர்.**

(30) முட்டத்தூர்.
(31) நகர்.
(32) நந்திவாடி.
(33) நேமூர்.
(34) பிடாரிப்பட்டு.
(35) செ.புதூர்.
(36) செ.குன்னத்தூர்.
(37) திருநந்திபுரம்.
(38) தும்பூர்.
(39) வேலியந்தல்.
(40) வேம்பி.
(41) நாரசிங்கனூர்.
(42) புதுப்பாளையம்.டி.
(43) தென்பேர்.

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.